பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

09-01-2025 **THURSDAY** **7.15 PM**

ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- ஒடிஷா மாநிலத்திற்கு இரண்டு நாள் பயணம் மேற்கொண்டுள்ள குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, நாளை வெளிநாடுவாழ் இந்தியர்கள் தின மாநாட்டின் நிறைவு விழாவில் கலந்துகொள்கிறார்.
- எரிசக்தியை இறக்குமதி செய்யும் நாடாக இருந்த இந்தியா, தற்போது அதனை ஏற்றுமதி செய்து வருவதாக மத்திய அமைச்சர் திரு நிதின்கட்கரி கூறியுள்ளார்.
- இயற்கை வேளாண்மை அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்கி, விவசாயிகளின் வருவாயை பெருக்குவதாக மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.
- பயங்கரவாதத்தை ஒடுக்குவதில் இந்தியாவும் - அமெரிக்காவும் இணைந்து செயல்பட்டு வருவதாக இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் திரு **Erick Garcetti** தெரிவித்துள்ளார்.
- ஆக்லாந்து சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யுகி பாம்ரி – பிரான்சின் **Olivetti** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

*<u>-- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<<<>>>>>>

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இரண்டு நாள் பயணமாக இன்று மாலை ஒடிஷா சென்றுள்ளார்.

புவனேஷ்வர் விமான நிலையத்தில் மாநில ஆளுநர் திரு ஹரிபாபு கம்பாம்பதி, முதலமைச்சர் திரு மோகன் சரண் மாஞ்சி மற்றும் அரசு அதிகாரிகள் வரவேற்றனர்.

ஆளுநர் மாளிகை வரை குடியரசுத் தலைவர் செல்லும் வழியில் கலைநிகழ்ச்சிகள் மற்றும் பாரம்பரிய நாட்டிய நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

ஆளுநர் மாளிகையில் இன்றிரவு தங்கும் குடியரசுத் தலைவர், நாளை புவனேஷ்வரில் நடைபெறும் 18-ஆவது வெளிநாடுவாழ் இந்தியர்கள் தின மாநாட்டின் நிறைவுநாள் நிகழ்ச்சியில் கலந்துகொள்கிறார்.

ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட வெளிநாடுவாழ் இந்தியர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டுள்ளனர்.

இந்த விழாவை மத்திய அரசும், ஒடிஷா மாநில அரசும் இணைந்து ஏற்பாடு செய்துள்ளன.

நிறைவுநாள் விழாவின்போது குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, வெளிநாடுகளில் சிறப்பாக சேவையாற்றிய, வெளிநாடுவாழ் இந்தியர்கள் 17 பேருக்கு பழங்குடியின விருதுகளை வழங்கி கௌரவிக்கிறார்.

<<<<<<>>>>>>

குடியரசு தினத்தையொட்டி, புதுதில்லியில் நடைபெறவுள்ள பேரணியை பார்வையிடுவதற்காக 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறப்பு விருந்தினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

பிரதமரின் மன் கி பாத் நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள், பல்வேறு துறைகளில் சாதனை படைத்தவர்கள், பஞ்சாயத்து அமைப்புகளின் தலைவர்கள், உட்பட பல்வேறு தரப்பினருக்கும் இதற்கான அழைப்பிதழ் வழங்கப்பட்டுள்ளதாக பாதுகாப்புத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

விளையாட்டுத்துறையில் சாதனை படைத்தவர்களும், மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களும் இந்த பட்டியலில் இடம்பெற்றுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

எரிசக்தியை இறக்குமதி செய்யும் நாடாக இருந்த இந்தியா, தற்போது அதனை ஏற்றுமதி செய்து வருவதாக மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு நிதின்கட்கரி தெரிவித்துள்ளார்.

மத்தியப்பிரதேச மாநிலம் **Pithampur**-ல் தேசிய தானியங்கி பரிசோதனைத் திட்ட நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய அவர், மாற்று எரிசக்தி ஆதாரங்களை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்துவதற்கான நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கூறினார்.

எதிர்காலத்தில் ஹைட்ரஜன் நாட்டின் முக்கிய எரிபொருளாக இருக்கும் என்று தெரிவித்த அவர், ஹைட்ரஜனால் இயங்கும் வாகனங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களை மத்திய அரசு ஊக்குவித்து வருவதாக தெரிவித்தார்.

நாட்டின் வளர்ச்சியில் வாகன உற்பத்தித்துறை முக்கிய பங்காற்றுவதாகவும் அவர் கூறினார்.

தற்போது இந்தியாவில் நான்கு கோடியே 50 லட்சத்திற்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகள் தானியங்கி வாகன உற்பத்தித்துறையில் உள்ளதாக திரு நிதின்கட்கரி குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>>

வேளாண் துறையில் அதிக அளவில் வேலைவாய்ப்புகளை பெருக்கி, விவசாயிகளின் வருவாயை உயர்த்துவதில் இயற்கை வேளாண்மை முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று, தேசிய இயற்கை வேளாண் உற்பத்திக்கான ஆய்வுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர், அதிகஅளவில் வருவாய் ஈட்டும் இயற்கை வேளாண் முறைகளை விவசாயிகள் ஆர்வமுடன் கடைபிடித்து வருவதாக தெரிவித்தார்.

இயற்கை வேளாண் பொருட்களின் ஏற்றுமதி தற்போது ஆறாயிரம் கோடி ரூபாய் அளவுக்கு உயர்ந்துள்ளதாகவும், அடுத்த மூன்றாண்டுகளில் இது 20 ஆயிரம் கோடி ரூபாயை எட்டும் என்றும் திரு பியூஷ் கோயல் கூறினார்.

<<<<<<>>>>>>

தில்லி சட்டப்பேரவைத் தேர்தல் நிர்வாகக்குழு கூட்டத்தில் பிஜேபி தலைவர் திரு ஜெ பி நட்டா இன்று கலந்துகொண்டு கட்சியின் அணுகுமுறைகள் குறித்து நிர்வாகிகள் மற்றும் கட்சித்தொண்டர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

இக்கூட்டத்தில், தில்லி பிஜேபி தலைவர் திரு வீரேந்திர சச்தேவா உள்ளிட்ட மூத்த தலைவர்கள் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்திற்குபின் செய்தியாளர்களிடம் பேசிய திரு சச்தேவா, தேர்தல் ஆயத்தப்பணிகள் குறித்து திரு நட்டா விரிவாக கேட்டறிந்ததாகவும், ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளை அவர் வழங்கியதாகவும் கூறினார்.

ஆம் ஆத்மி போலி வாக்காளர்களை கொண்டுவர முயற்சி மேற்கொள்வதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

இதனிடையே, ஆம் ஆத்மி கட்சியின் மூத்த தலைவர் திரு அரவிந்த் கெஜ்ரிவால், தேர்தல் ஆணையத்தில் புகார் ஒன்றை அளித்துள்ளார்.

அதில் வெளிமாநிலங்களிலிருந்து போலி வாக்காளர்களை அழைத்துவந்து தில்லி தேர்தலில் வாக்களிக்க பிஜேபி முயல்வதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

பயங்கரவாதத்தை ஒடுக்குவதில் இந்தியாவும் - அமெரிக்காவும் இணைந்து செயல்பட்டு வருவதாக இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் திரு **Erick Garcetti** தெரிவித்துள்ளார்.

மும்பையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இருநாடுகளுக்கும் இடையே புலனாய்வுத் தகவல்கள் தற்போது அதிக அளவில் பகிரப்பட்டு வருவதாக கூறினார்.

இருநாடுகளும் இணைந்து செயல்படுவதால் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் மற்றும் அதற்கு நிதியுதவி அளிப்போர் மீது சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அமைதியையும், அரசியல் நிலைப்பாட்டையும் உறுதி செய்வதன்மூலம், பொருளாதாரம் சீராக வளர்ச்சி பெறும் என்றும் அவர் கூறினார்.

இருநாட்டு மக்களுக்கும் இடையிலான தொடர்புகளை வலுப்படுத்துவதன்மூலம், உலகளாவிய அமைதியை நிலைநாட்டலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பொருளாதார வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புகளை பெருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய திரு **Erick Garcetti,** இந்தியா – மத்தியக்கிழக்கு – ஐரோப்பிய பொருளாதார வழித்தடத்தை வலுப்படுத்துவதன் மூலம் பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்யலாம் என்றும் குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>>

பொது மற்றும் போட்டித்தேர்வுகள் தொடர்பான அச்சத்தை களையும் வகையில் பிரதமர் திரு நரேந்திர மோடி மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களிடையே கலந்துரையாடும் நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக இதுவரை 2 கோடியே 70 லட்சம் பேர் பதிவு செய்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இதுவரை இல்லாத அளவிற்கு இந்த முறை அதிக எண்ணிக்கையில் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் ஆர்வத்துடன் பதிவு செய்துவருவதாக கல்வித்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த நிகழ்ச்சிக்கான பதிவு கடந்த மாதம் 14-ஆம் தேதி தொடங்கியது.

வரும் 14-ஆம் தேதிவரை மாணவர்கள் பதிவு செய்ய வசதி செய்யப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெறும் மகா கும்பமேளா நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குவதற்காக ஆகாஷவாணியில் கும்ப வாணி என்ற அலைவரிசையை அம்மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் நாளை தொடங்கிவைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில், காணொலி வாயிலாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கலந்துகொள்கிறார்.

கும்பவாணி அலைவரிசையில் நாளை முதல், அடுத்த மாதம் 26-ஆம் தேதிவரை கும்ப மங்கல்தன் உள்ளிட்ட கும்பமேளா தொடர்பான பல்வேறு நிகழ்ச்சிகள் தொகுத்து வழங்கப்பட உள்ளன.

காலை மணி 5.55 முதல், இரவு மணி 10.05 வரை தொடர்ச்சியாக இந்த நிகழ்ச்சிகள் இடம்பெற உள்ளன.

கும்பமேளா விழாவின் அன்றாட நிகழ்ச்சிகளை வர்ணனையாக தொகுத்து வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

103 மெகாஹெட்ஸ் அலைவரிசையில் ஒலிபரப்பாகும் கும்பவாணி நிகழ்ச்சிகளை **newsonair** செயலி மூலமாகவும், ஓ டி டி இணையதளங்களிலும் நேயர்கள் கேட்கலாம்.

<<<<<<>>>>>>

சத்தீஸ்கர் மாநிலத்தில் மூன்று மாவோயிஸ்டுகளை பாதுகாப்புப்படையினர் இன்று சுட்டுக்கொன்றனர்.

சுக்மா மற்றும் பிஜப்பூர் மாவட்டங்களின் எல்லையில் அமைந்துள்ள வனப்பகுதியில் பாதுகாப்புப்படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது, மாவோயிஸ்டுகள் பதுங்கியிருந்து பாதுகாப்புப்படையினரை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர்.

அப்போது, பாதுகாப்புப்படையினர் நடத்திய பதில் தாக்குதலில், இந்த மூன்று மாவோயிஸ்டுகள் சுட்டுக்கொல்லப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**<<<<<<>>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

ஆக்லாந்தில் நடைபெற்றுவரும் சர்வதேச டெனிஸ் போட்டியில் இந்தியாவின் யுகி பாம்ரி – பிரான்சின் **Albano Olivetti** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 3-6, 6-4, 12-10 என்ற செட் கணக்கில், இங்கிலாந்தின் **Lloyd Glasspool – Julian Cash** இணையை வென்றது.

தோஹா சர்வதேச டேபிள் டெனிஸ் போட்டியில் இந்தியாவின் மனவ் தாக்கர் - **Manush Shah** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**<<<<<<END>>>>>>**